**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC. 538/2024
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.3
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | முருகன் | -- | |
| Father's Name | வேலுச்சாமி | Calling | கார்பெண்ட்டர் |
| Village | இடையபொட்டல் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Accused absent. Petition filed.

**முதல் விசாரணை**

நான் திருவில்லிபுத்தூர் தாலுகா, இடையபொட்டல் தெருவில் குடியிருந்து வருகிறேன். கார்பெண்ட்டர் வேலை பார்த்து வருகிறேன். எனது மனைவி பெயர் ஜெயகுரு, எங்களுக்கு முத்துப்பாண்டி, முத்துமணி என்ற இரண்டு மகன்களும், மகேஸ்வரி என்ற மகளும் உள்ளனர். முத்துமணி இராஜபாளையம் ரோட்டில் உள்ள பழைய ஆர் டி ஓ ஆபிஸ் அருகில் உள்ள மாருதி கார் கம்பெனியில் வேலை பார்த்து வந்தான். எனது மகனுடன் குருமூர்த்தி என்பவரும் வேலை பார்த்து வந்தார். குருமூர்த்தி திருவில்லிபுத்தூரில் உள்ள ஜெயகிருஷ்ணா தெருவில் குடியிருந்து வந்தார். நான் திருவில்லிபுத்தூரில் உள்ள அசோக் நகரில் 30.08.2023 ம் தேதி வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது எனது மகனுடன் வேலை பார்த்து வரும் மற்றொரு நபர் போன் மூலமாக என்னிடம் வன்னியம்பட்டி விலக்கு மற்றும் வன்னியம் பட்டி காவல் நிலையம் செல்லும் ரோட்டில் உள்ள ரவுண்டானா அருகில் வைத்து எனது மகன் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது கேரளாவைச் சேர்ந்த ஒரு டாக்டர் அம்மாவின் கார் மோதி எனது மகன் சம்பவ இடத்திலேயே இறந்துபோய் விட்டதாகவும், எனது மகனுடன் சென்ற குருமூர்த்தியும் சம்பவ இடத்திலேயே இறந்துபோய் விட்டதாக கூறினார். நான், எனது மனைவி மற்றும் குடும்பத்தினர் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தோம். எனது மகனை ஆம்புலன்சில் வைத்திருந்தார்கள். குருமூர்த்தி இறந்த நிலையில் காணப்பட்டார். இந்த சம்பவத்தில் காரை ஓட்டி வந்த டாக்டர் அம்மாவுக்கும் காயம் ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். மேலும், அந்த டாக்டர் அம்மா திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிந்து கொண்டேன். போலிசார்

என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

என் மகனின் இறப்பிற்காக நஷ்டஈடு கேட்டு வழக்குப் போட்டுள்ளோம். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விசயங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN

Digitally signed by M VEERANAN
Date: 2026.01.19 11:46:42 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**